# வேதாகமத்தின் பிழையற்ற தன்மை

## வேதாகமத்தின் பிழையற்ற தன்மையின் அவசியம்

1. வேதாகமம் பிழையற்றது என்பதை அறிந்து கொள்ளும்போது தேவனை முற்றிலுமாக சார்ந்து அவரை மகிமைப்படுத்த உதவுகிறது.

   அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே (யோவான் 6:67,68). இந்த வசனங்கள் ஜீவனுள்ளது; பிழையற்றது.

2. இந்த வேத வசனத்தை நம்முடைய வாழ்க்கையின் விசுவாசத்திற்கும், நடைமுறைக்கும் உச்சகட்ட அதிகாரமாக வைக்க உதவுகிறது.

## வேதாகமத்தின் பிழையற்ற தன்மையின் வரையறை

பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து விஷயங்களிலும் அதன் மூலகையேட்டில் அது பிழையற்றதாக இருக்கிறது.

## வேதாகமத்தின் பிழையற்ற தன்மையின் சரியான புரிந்துகொள்ளுதல்

1. வேதாகமத்திலே ஒரு மனுஷன் மற்றொரு மனுஷனோட கூட பேசின பொய்யை குறித்து எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதினால் பரிசுத்த வேதாகமம் பொய்யானது அல்லது பிழையுள்ளது என்று சொல்லிவிடக்கூடாது.
   - பிசாசு ஏவாளிடத்தில் பொய் சொன்னது குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 3:5).
   - யோபுவினிடம் அவனுடைய நண்பர்கள் வந்து "நீ பாவம் செய்தது நிமித்தமாகதான் இந்த பாடுகள் உனக்கு வந்தது" என்று சொல்லுகிறார்கள். இது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று.
   - விசுவாசிகள் சொன்ன பொய் மற்றும் அவர்கள் செய்த பாவம் அனைத்தும் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

   இப்படிப்பட்ட காரியங்கள் வேதாகமத்தில் எழுதப்பட்டிருப்பதனால் வேதாகமம் பொய்யானது; பிழையானது என்று ஒருபோதும் சொல்லக்கூடாது. ஒரு மனிதன் தவறு செய்தால் அவன் தவறு செய்தான் என்றும்; அவன் பரிசுத்தமாய் வாழ்ந்தால் அவன் பரிசுத்தமாய் வாழ்ந்தான் என்றும் வெளிப்படையாக வேதாகமம் கூறுகிறது.

2. அறிவியல் சம்பந்தமாக அல்லது தொழில்நுட்ப சம்பந்தமான காரியங்கள் வேதாகமத்தில் துல்லியமாக கடைப்பிடித்திருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

   <u>உ.ம்.</u> சூரியன் உதிக்கிறது என்று சொல்லுகிறோம் ஆனால் பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்பது நமக்கு தெரிந்ததே! ....காலையில் மந்தாரமில்லாமல் உதித்து... (2 சாமு 23:4). வேதாகமம் என்பது தேவன் மனிதனுக்கு கொடுத்த ஒரு புஸ்தகம். ஆகவே, மனிதன் புரிந்துகொள்ளகூடிய நிலைமையில் இந்த வேதாகமம் எழுதப்பட்டிருக்கிறது.

3. பரிசுத்த வேதாகமத்தில் கவிதை நடையிலும், உருவங்களிலும் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.
   - ஏசாயா வேத வசனம் ஒரு மனிதனுக்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சியை கொண்டுவரும் என்பதை தன்னுடைய கவிதை நடையில் எழுதியிருக்கிறார். நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள், பர்வதங்களும் மலைகளும்

உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும் (ஏசாயா 55:12).

- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நானே திராட்சச்செடி என்று சொல்லும்போது அவர் திராட்சை செடியாக மாறவில்லை; அதை அவர் உருவகமாக சொல்லுகிறார்.

4. பரிசுத்த வேதாகமத்தில் சில எண்கள் முழுமையான நிலையில் எழுதப்பட்டிருக்கிறது.

<u>உ.ம்.</u> அப்போஸ்தலனாகிய பேதுரு செய்தி கொடுத்து முடித்தபின்பு, அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய 3000 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் (அப் 2:41). 'ஏறக்குறைய' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதினால் அது மூவாயிரத்திற்கும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம்.

5. பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள 'மேற்கோள்களில்' மாற்றம் இருக்கலாம்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட வசனங்களை மேற்கோள் காட்டும்போது சில வசனங்களை அப்படியே மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்; சில சமயங்களில் சில வார்த்தைகளை மட்டும் எடுத்திருக்கிறார்கள்; சில சமயங்களில் வார்த்தைகளை மாற்றி அமைத்திருக்கிறார்கள்; சில சமயங்களில் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட பின்னணிக்கும் புதிய ஏற்பாட்டில் இவர்கள் சொல்லக்கூடிய பின்னணிக்கும்சம்பந்தம் இல்லாததாகவும் இருக்கும். காரணம்! சிலர் மனப்பாடம் செய்த வசனத்தின் அடிப்படையில் மேற்கோள் காட்டியிருக்கலாம்; அல்லது சில எழுத்தாளர்கள் மற்ற எழுத்தாளர்களிடத்திலிருந்து கேட்டு எழுதியிருக்கலாம். சிலர் பழைய ஏற்பாட்டின் சுருள்களை பார்த்து அதை துல்லியமாக மேற்கோள் காட்டியிருக்கலாம். பரிசுத்த ஆவியானவர் முதன் முதலாக இந்த வேதாகமத்தை எழுதின எழுத்தாளர்களுக்கு மட்டும் இப்படி எழுதக்கூடிய உரிமையை அனுமதித்திருக்கிறார். இப்படிப்பட்ட வசனங்களை நாம் அதனுடைய பொருளின் அடிப்படையிலும் அதனுடைய சூழ்நிலையின் அடிப்படையிலும் நாம் வியாக்கியானம் செய்யவேண்டும்.

6. ஒரே சம்பவத்தை எழுத்தாளர்கள் வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தியிருக்கலாம்.

இதை விசேஷமாக சுவிசேஷங்களில் நாம் காணமுடியும். மத்தேயு: ஒரு சம்பவத்தில் இரண்டு குருடர்களை இயேசு குணமாக்கினார் என்று குறிப்பிடுகிறார். மாற்கு மற்றும் லூக்கா இருவரும் ஒரு குருடனுக்கு கர்த்தர் சுகத்தை கொடுக்கிறார் என்று எழுதுகிறார்கள். ஒவ்வொரு எழுத்தாளர்களும் பார்க்கிற கோணங்கள் நோக்கங்கள் வேறு! அந்த நோக்கங்களின் அடிப்படையிலேயே இந்த சுவிசேஷத்தை எழுதுகிறார்கள்.

7. ஒரு தலைப்பை குறித்தோ அல்லது ஒரு விஷயத்தை குறித்தோ பரிசுத்த வேதாகமம் கூறும்போது அதனுடைய எல்லா விவரங்களையும் சொல்லவேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆனால் அதை குறித்து வேதம் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறதோ அது உண்மையாக இருக்கிறது.

உதாரணத்திற்கு விவசாயத்தை குறித்து வேதம் முழுமையாக சொல்லாவிட்டாலும் அதைக்குறித்து என்ன சொல்லியிருக்கிறதோ அது முற்றிலும் உண்மையாக இருக்கிறது.

<u>வேதாகமத்தின் பிழையற்ற தன்மையின் ஆதாரங்கள்</u>

1. தர்க்கரீதியான ஒற்றுமை:

- தேவனே சத்தியபரர் (ரோமர் 3:4). வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2 தீமோ 3:16). ஆக, பரிசுத்த வேதாகமத்தின் மூல ஆதாரம் தேவனே!
- பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவியானவர் (யோவான் 16:13). பரிசுத்த ஆவியானவர் வேதத்தை எழுதிய மனிதர்களை ஆளுகை செய்தார் ( 2 பேதுரு 1:21). ஆக, எழுத்தாளர்கள் என்ன எழுதினார்களோ அதுவும் உண்மையானதே!

இந்தக் காரியங்களில் தேவனுடைய தன்மையையும் (குணாதிசயத்தை) பார்க்கிறோம். நாம் தேவனுடைய வேதாகமத்தில் பிழை உள்ளது என்று சொல்வோமானால் அவருடைய குணாதிசயத்தையும் மறுக்கிறவர்களாக இருக்கிறோம்.

2. வேதாகமத்தில் கூற்றுகள்: வேதாகமம் சத்தியமுள்ளது என்பதை குறித்து வேதாகமமே சாட்சி கொடுக்கிறது.
   1. பழைய ஏற்பாட்டின் ஆதாரங்கள்:
      - உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம் (சங்கீதம் 119:142).
      - உமது கற்பனைகளெல்லாம் உண்மை(சங்கீதம் 119:151).
      - உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம் (சங்கீதம் 119:160).
      - கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது (சங்கீதம் 19:9).
      - கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது (சங்கீதம் 12:6).
   2. புதிய ஏற்பாட்டின் ஆதாரங்கள்:
      - உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17).
      - சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து..(யாக்கோபு 1:25)
      - பரிசுத்த வேத எழுத்துக்களை..(2 தீமோ 3:15)
   3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆதாரம்:
      - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழும்போது பழைய ஏற்பாட்டு சம்பவங்களை குறிப்பிடுகிறார்: நோவாவின் ஜலப்பிரளயம், லோத்தின் காரியம், யோனா மீன் வயிற்றில் மூன்று இரவுபகல் இருந்ததை குறித்தும், தானியேல் தீர்க்கதரிசியினுடைய பெயரைச் சொல்லி பாழாக்குகிறவனுடைய அருவருப்பை குறித்து குறிப்பிடுகிறார்.
      - அனேக இடங்களை குறிப்பிடுகிறார்: சோதோம் கொமாரா.
      - முற்பிதாக்களின் பெயரை குறிப்பிடுகிறார்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு. இதன்மூலமாக வரலாற்று உண்மையை அறிந்துகொண்டு வேதம் பிழையற்றது என்பதை அறிந்து கொள்கிறோம்.
3. சில எழுத்திலேயே நிற்கக்கூடிய வேத பகுதிகளும் வேதாகமத்தில் இருக்கின்றன.

நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும்,

ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 5:17,18).

- உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயரிடத்தில் இயேசுகிறிஸ்து பேசும்பொழுது: மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? (மத் 22:31). **'தேவனுமாயிருக்கிறேன்'** என்று நிகழ்கால சொற்றொடரில் குறிப்பிட்டுச் சொல்வதினால் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்கள் உயிரோடு இருக்கிறார்கள்; அவர்களுக்கு நான் தேவனாயிருக்கிறேன் என்று அர்த்தமாகிறது.
- பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி: கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் **'என்** ஆண்டவரோடே' சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே (மத் 44=சங்கீதம் 110:1). தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை (மத் 22:41–46). இந்த சம்பவத்தில் தாவீது இயேசு கிறிஸ்துவை 'என் ஆண்டவரே' என்று சொல்லி சொல்லுகிறார்; ஆனால் யூதர்கள் அவர் 'தாவீதின் குமாரன்' என்று சொல்லுகிறார்கள் இது எப்படி சாத்தியமாகும். இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 100% மனிதனாகவும் 100% தேவனாகவும் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். ஆக கிறிஸ்து சொன்னது போல ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்பது இங்கே தாவீது குறிப்பிட்ட **'என்'** என்கின்ற வார்த்தையிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடியும்.

<u>நடைமுறைக் காரியங்கள்</u>

<u>வேதாகமம் பிழையற்றது என்பதை நாம் மறுக்கும்போது ஏற்படும் விளைவுகள்:</u>

1. ஒருவன் வேதாகமம் பிழையானது என்று சொன்னால் அந்த வேதத்தை கொடுத்த தேவனும் பொய்யர் என்று கூறுகிறான். தேவன் என்ற ஸ்தானத்திலிருந்து அவரை இறக்கி விடுகிறான்.
2. பரிசுத்த வேதாகமத்தில் அதிகாரத்தை குறைக்கிறான்.
3. பரிசுத்த வேதாகமத்தை அவனால் அதிகமாக சார்ந்து கொள்ளமுடியாது.
4. பரிசுத்த வேதாகமத்தில் நம்முடைய விசுவாசத்திற்கு அடுத்த காரியத்தில் பிழையற்றதாக இருக்கிறது; ஆனால் அதனுடைய வரலாற்று விஷயங்கள், புவியியல் சம்பந்தப்பட்ட காரியங்கள், வம்ச வரலாறுகளை பார்க்கும்பொழுது அதில் பிழையிருந்தால் அதில் ஒன்றும் தவறல்ல என்று நினைக்கிறார்கள். அப்படி நாம் நினைத்தோமெனில் நம்முடைய மனித பகுத்தறிவு வேதத்தைவிட அதிக உயர்வான இடத்தை எடுத்துக்கொள்ளும்.